**விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியம் - 2021**

**-----------------------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**........................**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

**......................................................**

விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**...........................................................................**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

**.......................................................................................................................................**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

.........................................................................................

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்தின் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 விடயத்தை வலியுறுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 1.10 இன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு கொவிசெத லொத்தர் வருமானத்திலிருந்து 10 சதவீதம் அளவானவை 1995 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை தேசிய லொத்தர் சபையினால் பொதுத் திறைசேரியின் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட மொத்த தொகை ரூபா 6,010,246,615 ஆக இருந்த போதிலும் நம்பிக்கை உறுதிப்பத்திரத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிதியத்திற்கு 27 ஆண்டுகளினுள் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்தது ரூபா 955,605,390 தொகை மாத்திரமாகும். | இல்லை | கொவிசெத லொத்தர் வருமானத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துதல் வேண்டும். |

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 150 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் சட்டரீதியான தன்மை, செயற்பாடுகளின் தன்மை, அதன் பிரதான நடவடிக்கைகளின் விபரம், கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் செயற்பாடுகளை நிர்வகிப்பதற்குரிய நம்பிக்கைப் பொறுப்பின் உறுதிப்பத்திரம் என்பன தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதியம் சம்பந்தமாக காட்டப்பட்ட வேண்டிய வைகள் என கணக்காய்வு ஐய வினாவின் மூலம் காட்டப்பட்டுள்ள தகவல்கள் இந்த ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களுக்காக விளைதிறன் ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாததன் காரணமாக முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்த ரூபா 1,074,192 தொகையான சொத்துக்கள் சம்பந்தமாக மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்தம் செய்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது உரிய பொறுமதியை மீள் கணிப்புச் செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்த சொத்துக்களை மீள்கணிப்புச் செய்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன என்று கணக்கீட்டுக் கொள்கைகளில் காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக கொவிசெத லொத்தரின் விற்பனை வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 1994 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டுவரை கொவிசெத லொத்தர் வருமானம் பெறவேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அப்போது நிதியத்தின் நிதிநிலைமை சம்பந்தமாக உள்ளபடியான தகவல்களை வெளிப்படுத்தவில்லை என கணக்காய்வினால் | கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | சுட்டிக்காட்டப்பட்டிருந்ததனால் 2016 ஆம் ஆண்டிலிருந்து உள்ளபடியாக நிதியத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டு பெறவேண்டிய பணம் குறிப்புக்களின் மூலம் காட்டப்பட்டுள்ளது. | |
| (ஆ) | விவசாய சக்தி கடன் திட்டத்தின் கீழ் அரசாங்க வங்கிகளின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடனுக்காக மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 3,488,230 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்ட வட்டி வருமானம் ரூபா 2,791,112 ஆக இருந்ததன் காரணமாக வட்டி வருமானமும் கிடைக்கவேண்டிய வட்டி வருமானமும் ரூபா 697,118 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 697,117.27 தொகை 2021 ஆம் ஆண்டின் போது கிடைத்துள்ளது. அது கிடைக்க வேண்டிய வட்டி கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டுள்ளது. அது 2020 ஆம் ஆண்டிற்கான பெறுவனவுகளாகும். இது காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்காக பெறவேண்டிய வட்டி வருமானம் முழுவதும் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைந்த திறைசேரி உண்டியல்களின் 2021 ஆம் ஆண்டிற்கான வட்டி ரூபா 905,434 ஆக இருந்த போதிலும் அதனை ரூபா 3,248,997 ஆக கணக்கீடு செய்ததனால் திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வட்டி வருமானம் ரூபா 2,343,563 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | திறைசேரி உண்டியல்களுக்கான வட்டி வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டில் அட்டுறு அடிப்படையில் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் கிடைக்க வேண்டிய திறைசேரி உண்டியல்களின் வட்டி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது என்பது வெளிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் முன்னைய ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய சோளக கடன் வட்டி வருமானத்திற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டிற்காக கிடைத்த சோளக கடன் வட்டி ரூபா 228,508 தொகை மீளாய்வாண்டிற்கான வட்டி பெறுவனவுகளாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். 2020 ஆம் ஆண்டின் நவம்பர் 20 ஆந் திகதி இக்கடன் 2020 ஆம் ஆண்டில் நாள் கணக்கிற்குரிய வட்டிப் பணம் கிடைக்கவேண்டியதாக பதியப்பட்டிருக்கவில்லை. இக்கடன் பணம் 06 மாதகால எல்லையின் கீழ் தீர்த்து முடிவுறுத்தலின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதனால் உரிய பெறவேண்டிய வட்டி வருமானம் 2021 ஆம் ஆண்டிற்கான வட்டி வருமானமாக பதியப்பட்டுள்ளது. | கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க கடன் வட்டியை கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | 2020 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைகின்ற மக்கள் வங்கியின் இரண்டு நிலையான வைப்புக்களுக்காக 202 திசெம்பர் | 2022 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைகின்ற ரூபா 125,000,000 பெறுமதியான மக்கள் வங்கியின் இரண்டு | நிதிக்கூற்றுக்களில் சரி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 31 ஆந் திகதியில் கிடைக்க வேண்டிய வட்டிப் பெறுமதி ரூபா 3,861,301 ஆக இருந்த போதிலும் வட்டி வருமானத்தை ரூபா 10,178,963 ஆகக் காட்டியதன் காரணமாக வட்டி வருமானத்திற்கும் கிடைக்க வேண்டிய வட்டி வருமானத்திற்குமிடையேயான ரூபா 6,317,662 வித்தியாசம் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்களுக்காக 2021-12-31 ஆந் திகதியில் கணக்கீடு செய்துள்ள ரூபா 3,861,301 தொகையான வட்டிப் பெறுமதி 2021 ஆம் ஆண்டின் போது கிடைக்க வேண்டிய வட்டிப் பெறுமதியாகும். உரிய வித்தியாசமானது பேரேட்டுக் கணக்குகளில் ஆரம்ப மீதியானதுடன் இந்த ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (ஊ) | நிதி நிலைமை கூற்றில் நடைமுறைச் சொத்துக்களாகக் காட்டப்பட்டுள்ள ரூபா 7,241,656 தொகையான சேமிப்புக் கணக்கின் மீதியானது உள்ளபடியாகக் காணப்பட்ட மீதியல்ல என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த மீதியானது 2002 ஆம் ஆண்டு தொடக்கம் இறுதிக் கணக்கறிக்கைகளில் சுட்டிக்காட்டப்படுவதுடன் அப்பணத்தை பதிவழிப்பது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | விசாரணைகள் மேற்கொண்டு அதன் தீர்மானத்தின் அடிப்படையில் பதிவழித்தல் செய்தல் வேண்டும். |
| (எ) | நிதி நிலைமை கூற்றில் நடைமுறைச் சொத்துக்களில் முன்னைய ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 1,193,727 தொகையான ஏனைய பெறவேண்டிய வட்டி மீதி, குறுங்கால 5 கடன் மீதிகளின் ரூபா 18,354,761 மொத்த தொகை, நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் போது பொறுப்பேற்கப்பட்டிருந்த ரூபா 9,112,579 தொகையான விவசாய வங்கியின் நீண்ட கால கடன் மீதி என்பன காணப்பட்டன என்பதனை அல்லது அறவீடு செய்யும் இயலுமை உள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியானது இன்னும் இரண்டு நிதியங்களை ஒன்றிணைத்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஒரு நிதியமாகும். அதன் போது ஒன்றிணைக்கப்பட்ட நிதியங்களில் அப்போது காணப்பட்ட மீதிகள் அவ்வாறே விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சில மீதிகள் தற்பொழுது தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் தகவல்களை தேடிக்கண்டுபிடிக்க முடியாத மீதிகள் இன்னும் மீதிகளாகக் காணப்படுகின்றன. அப்போதிலிருந்து காணப்பட்டு வரும் ஏனைய கடன் வட்டி மீதிகளை ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அறவீடு செய்யும் இயலுமை இல்லாதிருந்ததால் பதிவழித்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்
......................................................................................................................

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| ............ | ....................... | ................ | ................ | ............................ | .............. |
| | ரூபா ......... | ரூபா ........... | ரூபா .......... | | |
| கொவிசெத லொத்தர் வருமானம் | 5,054,641,225 | 5,033,927,559 | 20,713,666 | நிதியத்தின் கொவிசெத லொத்தர் வருமான மீதிக்கும் திறைசேரியின் மீதிக்குமிடையேயான வித்தியாசத்தை தெரிவித்து அனுப்புமாறு தேசிய லொத்தர் சபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | வித்தியாசத்தை இனங்கண்டு சரி செய்தல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை
.........................................................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| .................. | | ................... | ............ | ................ | ......... |
| (அ) | விவசாயிகளின் வைப்புக்கள் | 697,644 | விபரமான பட்டோலையும் மீதிகளின் உறுதிப்படுத்தலும் | விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் போது இம்மீதிகளை ஒப்படைத்தல் இடம்பெற்றது. இம் மீதிகள் தொடர்பான மீதிகளின் பட்டியல் மாத்திரம் காணப்படுகின்றன. | தாமதமின்றி சரியான விபரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | பங்கு கணக்கின் மீதி | 591,965 | பங்குச் சான்றிதழ் | -மேற்படி- | தாமதமின்றி விபரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | கொவிசெத நிதியத்தின் மீதி | 159,399,408 | விபரமான பட்டோலையும் மீதிகளின் உறுதிப்படுத்தலும். | -மேற்படி- | தாமதமின்றி விபரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

**.................................................................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|
| | **.........................................** | **.........................** | **............................** | **......................** |
| (அ) | அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | நிதி ஒழுக்கத்தினைப் பேணுவதற்காக ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தில் அங்கீகரிக்கப்படாத பாதீட்டுக்குப் புறம்பான வருமான சேகரிப்புக்கள் செலவு செய்தல்கள் அங்கீகரிக்கப்படாதிருக்க வேண்டிய போதிலும் 1994 மார்ச் 09 ஆந் திகதி விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிதியம் பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி அமுல்ப்படுத்தப்படுகின்றது. | அதிகாரச் சட்டத்தின் வரைபை அங்கீகரித்துதுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் தற்பொழுது இடம் பெற்று வருகின்றது. இது தொடர்பான கலந்துரையாடல் நிதி அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. அதன் பின்னர் இது தொடர்பாக எடுக்கவேண்டிய மேலதிக நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | விரைவாக பாராளுமன்றத்தில் அதிகாரச் சட்டத்தை அங்கீகரிக்கச் செய்தல் வேண்டும். |
| (ஆ) | 1994 மார்ச் 09 ஆந் திகதிய விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 14 ஆம் பிரிவு | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில் லை. | நிதியத்தின் அதிகாரச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்பு நடைமுறை தாயாரிக்கப்பட்டு நிரந்தர பதவியணியினரை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆட்சேர்ப்பு நடைமுறையினை த் தயாரித்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தி | சுற்றறிக்கை திகதியிலிருந்து ஒரு ஆண்டிற்குள் ஒரு அதிகாரச் சட்டம் இல்லாத நியதிச் சட்ட ரீதியான நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் ஒரு அதிகாரச் சட்டத்தினைத் தயாரித்து பாராளுமனற்றத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டிய | அதிகார சட்ட வரைபினை அங்கீகரிக்கச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்று வருவதுடன் இது தொடர்பான ஒரு கலந்துரையாடலுக்கு நிதி அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்தை தயாரித்து பாராளுமன்றத்தில் அங்கீகரித்துக் கொள்ளுதல் வேண்டும். |

| | |
|---|---|
| போதிலும் இந்நிதியத்திற்காக ஒரு அதிகாரச் சட்டம் அங்கீகரித்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அதன் பின்னர் இது சம்பந்தமாக எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 80,149,176 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 38,549,215 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 41,599,961 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு மீளாய்வாண்டின் போது பொதுத் திறைசேரியிடமிருந்து கொவிசெத லொத்தர் வருமானம் ரூபா 100,000,000 தொகை பெற்றுக்கொள்ளல் பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2002 இலிருந்து 2004 வரை 9 சந்தர்ப்பங்களின் போது தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு ரூபா 102,662,700 மொத்த தொகையான கடன் வழங்கப்பட்டிருந்தது. அக்கடன் பணத்தில் ரூபா 9,000,000 தொகை ஒரு ஆண்டிற்குள்ளும் ரூபா 93,662,700 தொகை கண்டியில் அமைந்துள்ள மஹபேரியதென்ன வத்த என்ற பெயருள்ள காணியை விற்ற உடன் அறவீடு செய்வதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கிக் கொண்டிருந்த போதிலும் இணங்கிக்கொண்டவாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவீடு செய்வதற்கு இருக்கின்ற கடன் மீதி ரூபா 60,812,700 மற்றும் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 98,023,448 ஆகும். கடன் வழங்கி 20 ஆண்டுகள் எடுத்திருந்தும் இன்னும் அறவீடு செய்யப்படாது காணப்பட்டது. | 2013 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 98,412,700 தொகையான கடன் மீதியானது 2022-05-31 ஆந் திகதியளவில் ரூபா 59,212,700 ஆக இருந்தது. தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு பல சந்தர்ப்பங்களில் இக்கடனை விரைவாக செலுத்தி முடிக்குமாறு தெரியப்படுத்தியிருந்தும் சபையில் காணப்பட்ட நிதி நிலைமையின் பிரகாரமாக மாதாந்தம் ரூபா 400,000 தொகைக்கு மிகையாக செலுத்த முடியாது என தெரிவிக்கப்பட்டது. | உடன்படிக்கையின் பிரகாரம் கடன் வட்டியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 24 மாதங்களுக்குள் அறவீடு செய்வதற்கு இணக்கம் தெரிவித்து ரூபா 500,000 பணம் உருளைக் கிழங்கு பயிர்செய்கைக்காக நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள வலப்பனை கிராமத்தின் ஒரு விவசாயிக்கு 2016 ஆம் ஆண்டின் போது விடுவிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக ரூபா 1,000,000 தொகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரால் செயற்திட்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை என அறிவித்திருந்ததன் காரணமாக மிகுதிப்பணம் விடுவிக்கப்படவில்லை. கடனை வழங்கி 6 ஆண்டுகள் கடந்திருந்தும் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தி வழங்கிய ரூபா 500,000 கடன் பணத்தையும் வட்டியையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு கமத்தொழில் நீதிச் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | இணங்கிக்கொள்ளப்பட்டவாறு பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தினூடாக சோளம் பயிர்ச்செய்கை செய்யும் விவசாயிகளுக்கு 6 சதவீத வட்டியின் கீழ் கடன் வழங்குவதற்காக ரூபா 200,000,000 வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு வழங்கப்படுகின்ற கடன் பணத்திற்காக 1 சதவீத வட்டியுடன் கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தினால் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு மீளச் செலுத்தி தீர்த்துவைக்க வேண்டிய போதிலும் கடன் பணத்தை தீர்த்துவைக்கும் போது 2021 திசெம்பர் 31 வரை ரூபா 1,400,959 தொகையான வட்டிப்பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இக்கடன் பணத்தில் இன்று வரை ரூபா 139.2 மில்லியன் அறவீடு செய்யப்பட்டுள்ளது. வட்டிப் பணத்துடன் எஞ்சியுள்ள மீதியை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்காக தொடர்ச்சியாக தெரியப்படுத்தப்படுகின்றது. | தவணைப் பணத்துடன் வட்டியையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

**……………………………………………**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| | **……………………………………** | **………………………….** | **…………………** |
| (அ) | கைவிடப்பட்ட வயல்களை விவசாயம் செய்யும் விசேட நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் 2020/21 ஆம் ஆண்டின் போது ரூபா 25,000,000 தொகையை விவசாயிகளுக்கு கடனாக வழங்குவதற்காக கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மாவட்ட அலுவலகங்களினால் அப்பணத்தில் ரூபா 10,519,024 தொகை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் ஆரம்பத்திலேயே வேண்டிக் கொண்ட விவசாயிகள் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வந்திருக்காததனால் அப்பணம் மிகுதியாக இருந்து மீண்டும் நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. | எதிர்பார்த்த வகையில் திட்டத்தை அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டின் போது கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு பொலன்னறுவை மாவட்டம் முழுவதும் பரந்து காணப்படும் 3000 ஏக்கர் காணிகளை Global Gap சான்றுபடுத்தும் முறைமைக்கு இணங்க 2018/2019 ஆண்டில் பயிர்ச்செய்கை செய்தல், சர்வதேச தரத்திலான நடைமுறை தொடர்பாக விவசாயிகளுக்கு தெரியப்படுத்துதல் மற்றும் சுற்றாடலுக்கு சாதகமான நிலைபேறான விவசாய நடைமுறைகளைப் பின்பற்றி பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்ளும் குறிக்கோளில் உருவாக்கப்பட்ட ரண்கெவிலிய சமூக தொழில் முயற்சி பொது கம்பனிக்கு ஒரு ஆண்டு காலத்தில் செலுத்தும் அடிப்படையில் ரூபா 5.9 மில்லியன் வட்டி இல்லாத கடன் வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்ட காலப்பகுதிக்கு இணங்க 2019 மார்ச் மாதமளவில் விவசாயிகளின் நெல் உற்பத்திக்காக GAP (Good Agriculture Practice) சான்றிதழினை வழங்குவதற்கு | சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கான தொடக்க கட்டமாக தற்பொழுது பொலன்னறுவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கோவை செய்யப்பட்டுள்ளது. | திட்டமிட்டவாறு விவசாயிகளுக்கு சான்றிதழை வழங்கி கடன் பணத்தை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்டிருந்தும் 2021 திசெம்பர் மாதம் வரை ஒரு விவசாயியேனும் எதிர்பார்த்த மட்டத்தை அடைந்துகொண்டிருக்காததுடன் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் வழங்கிய கடனும் இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2002 ஆம் ஆண்டின் போது சுழற்சி நிதியத்தையும் கமத்தொழில் நிதியத்தையும் ஒன்றிணைத்து விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் போது அந்த இரண்டு நிதியங்களிலும் காணப்பட்ட வரவு மற்றும் செலவு கடன் மீதிகள் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்டன. அதன் போது நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட சுழற்சி நிதியத்தின் ரூபா 44,255,850 தொகையான குறுங்கால கடன் மீதியை அறவீடு செய்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,490,000 தொகையான படிகள் செலுத்தப்பட்டு 10 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இன்னும் 2019 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாத ரூபா 39,967,891 கடன் தொகை நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டன. | 2014 ஆம் ஆண்டின் போது அறவிடப்படாத கடன் மீதியை புலனாய்விற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் தேடிகண்டுபிடிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விவசாய அமைப்புக்களிடமிருந்து உரிய கடன் மீதியை பகுதி பகுதியாக அறவிட்டு குறித்த அளவு தொகை விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. தற்பொழுது இந்த மீதியானது ரூபா 39,960,891 வரை குறைவடைந்துள்ளது. | கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஒரு தனியார் கம்பனிக்கு 2003 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டுள்ள ரூபா 3,500,000 கடன் பணத்தில் ரூபா 860,000 தொகையும் அட்டுறு வட்டிப் பெறுமதி ரூபா 676,666 தெகையும் இன்னும் அறவீடு செய்யவேண்டிக் காணப்பட்டது. இக்கம்பனி வியாபார நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளது எனவும் கடனைப் பெற்ற நபர் மரணமடைந்துள்ளார் என நிதியத்திற்கு தெரியப்படுத்தியுள்ளதனால் மேலும் கடனை அறவீடு செய்யும் இயலுமை தொடர்பாக நியாயமான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு அறவீடு செய்தல் அல்லது தேவையான சட்ட நடவடிக்கை | இந்த நிறுவனத்திற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் தற்பொழுது ஞாபகப்படுத்தல் கடிதமும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.அதற்காக வழங்கப்பட்டுள்ள கால எல்லை மிகைதுள்ளதனால் இது சம்பந்தமாக சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்று செயற்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | பெரிய வெங்காய விதைகளை உற்பத்தி செய்கின்ற 63 விவசாயிகளுக்கு 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 11,370,000 கடன் வழங்கப்பட்டிருந்தது. இணங்கிக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் கடனை அறவிடாமையால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,244,583 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்கடனை கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தினூடாக விவசாய வங்கியின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள மீதி பகுதி பகுதியாக அறவிடப்படும். | இணங்கிக் கொள்ளப்பட்டவாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | ஒரு ஆண்டிற்குள் அறவீடு செய்யும் நிபந்தனையின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தில் சோளம் பயிர்ச்செய்கை செய்யும் 10,000 விவசாயிகளுக்கு வழங்குவதற்கு கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு ரூபா 90,000,000 தொகை 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 5 ஆண்டுகளைக் கடந்திருந்தும் ரூபா 24,421,032 தொகையான மீதி அறவீடு செய்ய வேண்டிக் காணப்பட்டது. | கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் விவசாயிகள் வங்கியினூர்டாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள மீதி பகுதிபகுதியாக அறவிடப்படும். விரைவாக அறவிட்டு அனுப்பிவைக்குமாறு கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் தொடர்ச்சியாக தெரியப்படுத்தி வருகின்றது. | கடனை அறவீடு செய்யும் போது நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் பிரதான குறிக்கோளை அமுல்ப்படுத்துவதற்கு பணத்தை பயன்படுத்தாது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணம் தொடர்ச்சியாக நிலையான வைப்புக்களிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்களில் ரூபா 365,001,919 தொகையும் திறைசேரி உண்டியல்களில் ரூபா 97,821,406 தொகையும் முதலீடு செய்யப்பட்டு வட்டி வருமானமாக ரூபா 26,512,574 தொகை உழைக்கப்பட்டிருந்தது. | நிதியத்தின் மிகைப் பணம் அரசாங்க வங்கிகளில் உச்ச அளவு பிரதிபலன்கள் கிடைக்கும் வகையில் முதலீடு செய்யப்பட்டு பெற்றுக்கொள்ளப்படும் வட்டி வருமானமும் நாட்டின் சிறிய விசாயிகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நானாவித கடன் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படுகின்றன. அதற்கிணங்க பொதுத் திறைசேரிக்கு செலவுப் பாரம் இல்லாது நிதியத்தை பேணுவதற்கு முடியுமான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் பிரதான குறிக்கோளுக்காக நிதி பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பகுதி I இன் 15.1 ஆம் பந்தியின் மூலம் உள்ளடக்கப்பட்ட நி.பி 877 (2) (ஈ) பிரிவின் பிரகாரம் நிதியத்தினால் அந்த நிதியத்திற்கான நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையானது அரசாங்க நிதித் திணைக்களத்திற்கான பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கவேண்டிய போதிலும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் செயலாற்றல் அறிக்கையானது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் செயலாற்றல் அறிக்கையினை உரிய காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் நிருவாக சபையினால் சிறந்த முறையில் ஒரு உள்ளகக் கணக்காள்வாளர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாய அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு செய்யப்படுகின்றது. | ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்படுதல் வேண்டும். |

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1) (இ) பந்தியின் பிரகாரம் நடைமுறை ஆண்டிற்கான பாதீடு செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் | பாதீட்டினை தயாரிக்கும் போது தொடர்ச்சியான செயற்திடட்டங்களின் பெறுமதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. பாதீட்டினை நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு | பாதீட்டிற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொளப்படுதல் வேண்டும். |

பெற்றுக்கொள்வதற்காக தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியதுடன் அதன் பிரதி அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அனுப்பிவைக்கப்படாது ஆண்டின் போது ரூபா 28,164,693 செலவு செய்யப்பட்டிருந்தது.

முன்னர் சமர்ப்பிப்பதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.